

சென்னை வடக்கு கிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதிக்குட்பட்ட புழல் ஒன்றியம் திமுக சார்பில் சென்றபாக்கம் ஊராட்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராமு ஏற்பாட்டில் புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழுவர் கால்பந்தாட்டம் போட்டியை மாவட்ட செயலாளர் மாதாவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ் .சுதர்சனம் துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு இரண்டு சக்கர வாகனத்தை பரிசு வழங்கினார். உடன் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.





சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் பகுதி கழக செயலாளர்கள் எஸ். ஜெபதாஸ் பாண்டியன்,இரா.லட்சுமணன், ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.மேலும் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ,டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி,ஜே. ஜே.எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் உரையாற்றினர்.தொகுதி பொறுப்பாளர் கே.வி,லோகேஷ், என். மருதுகணேஷ், ஆர்.வெற்றிவீரன், மாஸ்.டி. வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, நேதாஜி யு.கணேசன் எம்.சி, எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.எ.எம். சசிகுமார், ஜி.ஏழுமலை, எம்.பி.ஆர்.ராஜன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு. கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# பெருங்களத்தூர் வடக்குப் பகுதிக் கழகக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை!

தாம்பரம், ஜூன் 12-

பெருங்களத்தூர் வடக்குப் பகுதி செயலாளர் டி.காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் கனிவான கவனத்திற்கு இன்று ( 12 6 2025 வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில் மேற்கு தாம்பரம் கக்கன் தெருவில் அமைந்துள்ள PRC பார்ட்டி ஹால் (பழைய பிலிப்ஸ் மருத்துவமனை) பகுதி அவைத்தலைவர் டி.ஆர்.கோபி எம்.சி. தலைமையில் தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு ஆலோசனை வழங்க தாம்பரம் மாநகர செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், பாக முகவர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு முன்னிலை!

# திருவொற்றியூர் 7வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

### எஸ்.மோகன் ஆலோசனை வழங்கினார்! த.கார்த்திகேயன் ஏற்பாட்டில்!

சென்னை,ஜூன்.12

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 7வது வட்ட கழக சார்பில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமிஎம்.பி. ஆகியோரின் ஆலோசனைப்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், மாநகராட்சி மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் 7வது வட்ட கழக செயலாளர் த.கார்த்திகேயன் ஏற்பாட்டில் 10-6-2025 செவ்வாய்க்கிழமையன்று மாலை 6 மணியளவில், பாக-முகவர்கள் BLA-2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் தி-நகர் எஸ். மோகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்தும், கழக ஆக்கப் பணிகள், திண்ணை பிரச்சாரங்கள், உறுப்பினர்கள் சேர்த்தல், எவ்வாறு வாக்குகள் பெறுவது போன்ற ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இதில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் தனபால் உள்ளிட்ட பலர் தி.நகர் எஸ். மோகன் முன்னிலையில் தி. மு.கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், கிழக்கு பகுதி அவை தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி, கிழக்கு பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார், கே.பிரபாவதி, பொருளாளர் இரா.குமரேசன், மற்றும் வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், பாக-முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா:

# நெல்லை மத்திய மாவட்டத்தில் மின்னொளி கைப்பந்து போட்டி!

### அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைக்கிறார் - மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ தலைமை!

நெல்லை, ஜூன் 12-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் துறையூர் சாரல் விளையாட்டு கழகம் இணைந்து நடத்தும் மாநில அளவிலான மாபெரும் மின்னொளி கைப்பந்து போட்டி வருகிற 14.06.2025, 15.06.2025 ஆகிய (சனி, ஞாயிறு) தேதிகளில் துறையூர் சாரல் மைதானத்தில் மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு பங்கேற்று விழாவினை துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் துறையூர் சாரல் விளையாட்டு கழகம் இணைந்து நடத்தும் மாநில அளவிலான மாபெரும் மின்னொளி கைப்பந்து போட்டி வருகிற 14,15 ஆகிய தேதிகளில் (அதாவது சனி ஞாயிறு) கங்கைகொண்டான் ஊராட்சி துறையூர் சாரல் மைதானத்தில் மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள் மணி ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமையில் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜு, முன்னாள் துணை மேயர் முத்துராமலிங்கம், தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன், மாநகர துணை செயலாளர் பிரபு பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மலை கண்ணன்,அரசு வழக்கறிஞர் கந்தசாமி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையாபாண்டியன், மாவட்ட சுற்றுச் சூழல் அமைப்பாளர் பல்க் குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், கீழநத்தம் ஊராட்சி மன்ற தலைவர் அனுராதா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க. மணி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்றுவிளையாட்டுப்போட்டியினை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் மைதீன் கான்,முன்னாள் அமைச்சர் மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா, மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என். மாலை ராஜா, முன்னாள் மாவட்ட செயலாளர் ஆ.துரை, நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், முன்னாள் எம்பி ஞான திரவியம்,நெல்லை மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், நெல்லை கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல், மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன் நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ், தீர்மானக் குழு உறுப்பினர் சுப. சீதா ராமன்,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலாசத்யானந்த், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ்,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் ராஜவர்மன்,மாநில சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகமது, உள்பட மத்திய மாவட்ட, மாநகர நிர்வாகிகள்,ஒன்றிய செயலாளர்கள், பகுதி செயலாளர்கள்,அணி அமைப்பாளர்கள்,நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் கீர்த்தி,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பிரபா அருள்மணி ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள் மணி செய்துள்ளனர்.

### கே.சசிகுமார் முன்னிலை! க.செல்வராஜ் தலைமை!

# மின் கழக தொ.மு.ச. - சிங்கார ரத்தின சபாபதி 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!

### 300 பேருக்கு கூ.பி.ஜெயின் எம்.சி. - செந்தில்நாதன் - ரத்தின சபாபதி உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன்.12

மறைந்த தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. முன்னாள் பொதுச் செயலாளர் சிங்கார ரத்தின சபாபதி அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு நேற்று 11.6.2025 சென்னை அண்ணா நகர் அவரது இல்லம் சென்று அவரது திருவுருவ படத்திற்கு தமிழ் நாடு மின் கழக தொமுச மாநில தலைவர் கே.சசிகுமார் மாநில துணை தலைவர் க.செல்வராஜ் அவரது மகன் பொறியாளர் செந்தில் நாதன் ரத்தின சபாபதி மற்றும் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் ஏ. ராஜேந்திரன், டி.அருள், கு.மாறன் ஆர்.சங்கர், சதீஷ் சிவப்பிரகாசம் சண்முகம், கலை மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.

அதை தொடர்ந்து சென்னை வடக்கு திட்டம் பெரம்பூர் கோட்டம் சார்பில் வில்லிவாக்கம் சிட்கோ பிரிவு அலுவலகத்தில் மாநில துணை தலைவர் க.செல்வராஜ் தலைமையில் தமிழ்நாடு மின் கழக தொமுச மாநில தலைவர் கே.சசிகுமார் முன்னிலையில் சிங்கார ரத்தின சபாபதி அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம் ஏழை எளியோர் பயன் பெறும் வகையில் 300 பேருக்கு பொறியாளர் செந்தில்நாதன் ரத்தின சபாபதி, வில்லிவாக்கம் பகுதி கழக செயலாளர் மண்டல குழ தலைவர் கூ.பி.ஜெயின் ஆகியோர் உணவு வழங்கினர்.

இந்நிகழ்வில் சென்னை வடக்கு திட்ட, கோட்ட, கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. முன்னாள் பொதுச் செயலாளர் சிங்கார ரத்தின சபாபதி 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை வடக்கு திட்டம் பெரம்பூர் கோட்டம் சார்பில் வில்லிவாக்கம் சிட்கோ பிரிவு அலுவலகத்தில் மாநில துணை தலைவர் க.செல்வராஜ் தலைமையில் தமிழ்நாடு மின் கழக தொமுச மாநில தலைவர் கே.சசிகுமார் முன்னிலையில் சிங்கார ரத்தின சபாபதி அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஏழை எளியோர் பயன் பெறும் வகையில் 300 பேருக்கு பொறியாளர் செந்தில்நாதன் ரத்தின சபாபதி, வில்லிவாக்கம் பகுதி கழக செயலாளர் மண்டல குழ தலைவர் கூ.பி.ஜெயின் ஆகியோர் உணவு வழங்கினர். இந்நிகழ்வில் சென்னை வடக்கு திட்ட, கோட்ட, கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கவரப்பேட்டையில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் ஆலோசனை படி ஒன்றிய செயலாளர் கி. வே. ஆனந்தகுமார் தலைமையில் கழகக் கொடியேற்றியும், கலைஞர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் ஒன்றிய துணை செயலாளர்கள் துர்கா வெங்கடேசன், சுரேஷ் பிரபு, நமச்சிவாயம், ஜோதி அரிபாபு, சதிஷ் குமார், தியாகராஜன், விஜயகுமார்,அரிபாபு, ரமேஷ், செல்வராஜ், லோகேஷ், அன்பு, ஜெகன், அக்கீம், கார்த்திக், சர்தார், தேவன், பிரபாகரன், உள்பட பலர் உள்ளனர்.

### ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

# வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம்!

### பகுதி செயலாளர்கள் அரிமா.சு.சேகர் - துரைகபிலன் தலைமை!

சென்னை ஜூன் 12

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல்கூட்டம்09.06.2025 திங்கள் கிழமையன்று காலை 10.00 மணிக்கு வேளச்சேரி காந்தி சாலையில் அமைந்துள்ள கபாலி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா, அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி என்.வி.என். சோமு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் வேளச்சேரி தொகுதிகளில் அடங்கிய மாநில, மாவட்ட நிர்வாகிகள் பொதுக் குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வட்ட கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோரின் ஆலோசனைப்படி, பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் 8வது வட்ட கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் ஏற்பாட்டில் பாக முகவர்கள் BLA2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வு கூட்டம், தொகுதி பொறுப்பாளர், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் எஸ்.மோகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வீ.கவி.கணேசன் எம்.சி., மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், இரா.முருகேசன், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன் மற்றும் பலர் கலந்துது கொண்டனர்.

### சுதந்திரப் போராட்ட வீரர்

# ஜி.ஏ.வடிவேலு 100வது பிறந்த நாள்!

### திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை!

சென்னை, ஜூன்,12,

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நெருங்கிய நண்பரும் சுதந்திரப் போராட்ட வீரருமான ஜி.ஏ.வடிவேல் அவர்களின் 100 வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினரும் அன்னை தெரசா தொண்டு அறக்கடளை நிறுவனத் தலைவருமான ஜி.கே. தாஸ் தலைமையில் இன்று மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

இளம் வயதிலேயே சுதந்திரப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அண்ணல் காந்தியடிகளிடம் நீங்கா பற்று கொண்டவராகவும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடம் நெருங்கிய நண்பராகவும் திகழ்ந்து சுதந்திரப் போராட்ட வீரர் ஜி.ஏ. வடிவேல் அவர்களின் 100 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (12.6.2025) பிற்பகல் 12.30 மணிக்கு சென்னை சூளை மேடு, திருவேங்கடபுரம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள அன்னை மாளிகையில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. இந் நிகழ்ச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் ஜி. கே. தாஸ் உள்பட சமூக ஆர்வலர்கள், அன்னை தெரசா தொண்டு அறக்கட்டளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 7வது வட்ட கழக சார்பில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஆகியோரின் ஆலோசனையின் படி _7வது வட்ட கழக செயலாளர் த.கார்த்திகேயன் ஏற்ப்பாட்டில் பாகமுகவர்கள் BLA2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வு கூட்டம், தொகுதி பொறுப்பாளர், திநகர் எஸ்.மோகன் தலைமையில் நடைபெற்றது. இதில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்தும், கழக ஆக்கப் பணிகள், திண்ணை பிரச்சாரங்கள், உறுப்பினர்கள் சேர்த்தல், எவ்வாறு வாக்குகள் பெறுவது போன்ற ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மற்றும் இதில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் தனபால் உள்ளிட்ட பலர் தி.நகர் எஸ்.மோகன் முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் குறிஞ்சி எஸ்.கணேசன், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.